**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 39/2020 DW3**

19.11.2025 **பி.வா.சா.3 பொன்னுசாமி சத்திய வாக்குமூலத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

வாதி என் மகன் (1ம் பிரதிவாதி) வழி பேத்தி என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி என் மகள் (விஜயா) வழி பேரன் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் என் குடும்பத்துக்கு பூர்வீக சொத்து என்றால் சரிதான். விஜயா, முருகேசன் மற்றும் சுப்பிரமணி ஆகியோர் எனது மக்கள் என்றால் சரிதான். என் மனைவி பெயர் ராசம்மாள். யார் யார் எல்லாம் சேர்ந்து பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்று கேட்டால், முருகேசன், சுப்பிரமணி மற்றும் வெங்கடேசன் ஆகியோர் பாகம் பிரித்துக் கொண்டார்கள். மேற்படி பாகம் மூலமாக வந்த சொத்தை தான் 1ம் பிரதிவாதி வெங்கடேசன், 4ம் பிரதிவாதி சுரேஷுக்கு விற்றதாக நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வெங்கடேசனுக்கு பாகமாக வந்த திருப்பூரில் உள்ள சொத்தை தான் அவர் 2, 3 பிரதிவாதிகளுக்கு விற்றார் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதி அவருக்கு முழு உரிமையில்லாத சொத்தை விற்றதே தவறு என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மத மறுப்பு திருமணம் செய்து கொண்டார். முருகேசன் மற்றும் சுப்பிரமணியத்திற்கு நான் தான் எனது உறவுக்குள்ளேயே திருமணம் செய்து வைத்தேன். 1ம் பிரதிவாதியை ஆரம்பத்தில் இருந்தே எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பிடிக்காமல் போய் விட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு விபத்துக்குள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது அவரது மனைவி மற்றும் மகள் தான் பார்த்தார்கள் என்றால் சரியல்ல, 1 நாள் மட்டுமே அவர்கள் வந்தார்கள், நான் தான் முழுவதும் பார்த்துக் கொண்டேன். நான் மருத்துவமனையில் வைத்து 1ம் பிரதிவாதியை பார்த்துக் கொண்டேன் என்று வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 11.08.2005ல் 2 ஏக்கர் 85 செண்ட் நிலத்தை யார் யார் சேர்ந்து கிரையம் வாங்கினார்கள் என்றால் சுப்பிரமணி, 1ம் பிரதிவாதி வெங்கடேசன் என் மனைவி ராஜம்மாள் ஆகியோர் சேர்ந்து வாங்கினார்கள். இவ்வழக்கின் 2ம் இலக்க சொத்தை 1ம் பிரதிவாதியின் மனைவி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோரின் உழைப்பு மற்றும் திருப்பூரில் உள்ள சொத்தை விற்றதன் மூலம் கிடைத்த பணத்தை வைத்தும் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் வைத்து வெங்கடேசனுக்கு நான் மற்றும் 4ம் பிரதிவாதி செலவு செய்து சிகிச்சை அளித்தது சம்மந்தமாக ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 4ம் பிரதிவாதி அவ்வாறு 1ம் பிரதிவாதிக்கு மருத்துவ

செலவுகள் செய்ததை காட்ட செலவு விவரங்கள் ஏதும் ஆவணமாக தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்குண்டான 95 செண்ட் நிலத்தை அவரின் வைத்திய செலவிற்காக கடந்த 08.05.2019ல் கிரையம் செய்து கொடுத்தார் என்றும், மேற்படி கிரையம் மூலம் வந்த தொகையை 1ம் பிரதிவாதி அவரின் மகளுக்காக 1ம் பிரதிவாதியின் பெயரிலேயே திருவண்ணாமலை கூட்டுறவு வங்கியில் ரூ. 5 லட்சம் மற்றும் ரூ. 2 லட்சம் நிரந்தர வைப்பீடு செய்ததற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் டெப்பாசிட் ஏதும் செய்யவில்லை என்றும் அதனால் தான் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சொத்து 3ம் நபர்கள் கைக்கு சென்று விடக்கூடாது என கருதி எந்த மறுபயனும் இல்லாமல் 1ம் பிரதிவாதியிடம் இருந்து 4ம் பிரதிவாதியான எனது மகள் வழி பேரனுக்கு பெயரளவில் கிரையம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு செய்த காரணத்தினால் தான் 1ம் பிரதிவாதி யாரிடமும் சொல்லாமல் எங்கேயோ போய்விட்டார் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு எல்லா சொத்திலும் பங்கு உள்ளது என்றும், 1ம் பிரதிவாதியிடம் இருந்து 4ம் பிரதிவாதி பெயருக்கு மோசடியாக செய்த கிரையம் செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. ஆகவே வாதி கேட்டுக் கொண்டபடி அவருக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. வாதியிடம் நானோ, என் குடும்பத்தாரோ சுமூகமாக இல்லை என்றால் சரிதான்.

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - ஒத்திவைக்கப்படுகிறது.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.